## 2. என்னை காக்கும் கன்மலையே

### பல்லவி

என்னை காக்கும் கன்மலையே
என்னை சுற்றும் அக்கினியே
என்னை பறந்து காக்கும் தேவா
உம்மை உயர்த்திடுவேன்

### அனுபல்லவி

*ஆமென் அல்லேலூயா ஆமென் அல்லேலூயா*
*அல்லேலூயா ஆமென் ஆமென் அல்லேலூயா (2)*

### சரணங்கள்

1. மலைகள் விலகினாலும்
கன்மலை பெயர்ந்தாலும்
உம் கிருபை விலகாது
என்றும் விலகாது
- ஆமென் அல்லேலூயா

2. ஆயிரம் பேராலும்
பதினாயிரம் பேராலும்
என்னை எதிர்த்து வந்தாலும்
நான் முறிந்து போவதில்லை
- ஆமென் அல்லேலூயா

3. மந்திரமானாலும்
குறிசொல்லுதலானாலும்
எனக்கு எதிராக
ஒன்றும் வாய்க்காதே
- ஆமென் அல்லேலூயா

4. கர்த்தர் என்னோடு-அவர்
சமூகம் என்னோடு
நான் ஓங்கி வளர்ந்திடுவேன்
செழித்து வாழ்ந்திடுவேன்
- ஆமென் அல்லேலூயா